ஸ்ரீ தந்வந்தரயே நம :

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பரிதாபி
கார்த்திகை

December
1972

தொகுதி 34
பகுதி 12

Vol. 34
No 12

ஆசிரியர் & பிரசுரகர்த்தா
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வைத்ய சந்திரிகை தங்கள் பத்திரிகை	...	225
ஹிருதய ரோகங்களில் பயன் தரும் ஔஷதங்கள்	...	226
கிரஹணி	...	233

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

நர்ஸிங்ஹோம் போன் நெ. 44

தலைமை வைத்யர் போன் நெ. 25

மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27

(ஆபீஸ்) போன் நெ. 61

மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை:

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
துங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள்:

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைதயரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5.

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5-50

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M|s. Kalia Brothers (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram: KALIA **Phone: Office - 3232**
Resi. - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு
அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,
ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி: KALIA போன்: ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : " அம்ருதம் " P. B. No. 1382. போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD · AVP

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்

— எங்களுடைய கிளைகள் : —

1.	23-B, பூஸா ரோடு, புது டில்லி-5	போன் :	585687
2.	மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,,	2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,,	85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-16	,,	32336
5.	பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1	,,	92
6	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,,	195
7.	கடைவீதி, பொன்னானி	,,	41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1.	,,	378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,,	87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு		
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18		33758
12.	இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2	,,	4891
13.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2		842
14.	No. 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)		31
15.	ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1		

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி. முதுகு வலி. சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 34	பரிதாபி கார்த்திகை	பகுதி 12
Vol. 34	1972 டிசம்பர்	No. 12

श्री धन्वन्तरये नमः

வைத்ய சந்திரிகை — தங்கள் பத்திரிகை

வைத்யர்களிடம் ஒரு வேண்டுகோள். நாட்டு வைத்யர்கள் என்று தனித்துக் குறிப்பிடும்படி ஒரு வைத்ய முறை இருப்பதையே விரும்பாத ஒரு சூழ்நிலையில், அந்த வைத்யமுறை தானேயும் அழியாது; அந்த முறை வைத்யர்கள் அதை அப்படி அழியவும் விடமாட்டார்கள் என்று அடிக்கடி பொதுமக்களிடையேயும் அரசியலாரிடையேயும் தெரிவிக்கவேண்டிய கடமை நமக்கு உண்டு. சென்ற சில ஆண்டுகளாக இதில் ஒரு தயக்கம் ஏற்பட்டுள்ளது. இது விரும்பத் தகாததெனினும் சூழ்நிலை அப்படி ஒரு தயக்கத்திற்குச் சாதகமாக அமைந்துள்ளது. சாம்பல் படிந்ததொரு நிலையில் உள்ளுள்ள தீப்பொறியை ஏதேனும் ஒரு வகையில் பாதுகாப்பதென்று துணிவுடன் இப்பத்திரிகை வெளியாகிறது. இதற்கு ஊக்கமளிக்கும் பணியிலாவது ஈடுபடக்கோருகிறோம். பத்திரிகைக்கு விஷயதானமும் சந்தாதாரர்கள் பெருக்கமும் இதற்கு உதவும்.

ஹிருதய ரோகங்களில் பயன் தரும் ஔஷதங்கள்

1. சிந்தாமணி ரஸம் : ரஸம், கந்தகம், அப்ரக பஸ்மம், அயஸ் பஸ்மம், வங்க பஸ்மம், சிலாஜது, அம்பர் வகைக்கு 40 கிராம், தங்க பஸ்மம் 10 கிராம், முத்து பிஷ்டி 20 கிராம், வெள்ளி பஸ்மம் 20 கிராம். முதலில் ரஸ கந்தகங்களை கஜ்ஜலி செய்து அம்பரையும் சிலாஜதுவையும் கலந்து பிறகு மற்றவைகளைச் சேர்த்து சித்திரமூல கஷாயத்திலும் பொற்றலைக் கையாந்தரை கஷாயத்திலும் ஒவ்வொரு நாளும் வெண் மருதம்பட்டை கஷாயத்தில் ஏழு நாளும் அரைத்து ஒரு டெஸீ க்ராம் அளவு மாத்திரை செய்துகொள்ளவும்.

தினம் காலை மாலை ஒரு மாத்திரை தேனில் சாப்பிட்டு மேல் சிற்றுமுட்டி கஷாயம் சாப்பிடவும்.

ஹிருதய ரோகங்கள் அனைத்திலும், விசேஷமாக ஹிருதய சூலம், ஹிருதயத்ரவம் (படபடப்பு) இவைகளிலும் நல்லது. ஹிருதய ரோகத்துடன் கல்லீரல் வீக்கமோ உதரமோ இருப்பின் ஆரோக்யவர்த்தன ரஸமும் சேர்த்து உபயோகிக்கலாம்.

2. அர்ஜுனக்ஷீரம் : வெண் மருதம்பட்டை 10 கிராம் எடுத்து 160 மிலி லிடர் பாலும் 160 மிலி லிடர் ஜலமும் சேர்த்து இளந்தீயில் மெதுவாகக் கிளறிக்கொண்டே காய்ச்சி ஜலம் சுண்டி பால் மீதமாகும்போது இறக்கி வடிகட்டி சர்க்கரை 5 கிராம், 5 ஏலரிசிகளின் தூள் போட்டுச் சாப்பிடவும். இது ஹிருதய நோய்களில் ஏற்ற பால் கஷாயம்.

3. பலாதிகிருதம் : சிற்றுமுட்டி வேர், நாகபலா வெண் மருதம்பட்டை, இவை வகைக்கு 1 கிலோ, இவைகளை இடித்து 16 லிடர் ஜலத்திலிட்டு 4 லிடர் மிகுதியாகக் கஷாயமாக்கி வடிகட்டி, பசுவின் நெய் 1 கிலோ சேர்த்து, அதிமதுரமும் மருதம் பட்டையும் வகைக்கு 125 கிராம் கல்கமாக அரைத்துச் சேர்த்துக் கிருதமாக்கிக் கொள்ளவும்.

10 கிராம் நெய்யை பசுவின் பாலுடன் சாப்பிட ஹிருதய வலி, உர:க்ஷதம், ரக்த பித்தம், காஸம், வாத ரக்தம் குணமாகும்.

4. ஜவாஹர மோஹரா : மாணிக்யம், பச்சை, முத்து, பவழம் இவைகளின் பிஷ்டி வகைக்கு 20 கிராம், ஸங்கேயசப் பிஷ்டி

40 கிராம், கஹருபா பிஷ்டி 20 கிராம், வெள்ளி ரேக்கு 10 கிராம், தங்க ரேக்கு 10 கிராம், காட்டுக் கொப்பரைத் தேங்காய்த் தூள் 40 கிராம், பட்டுப்பூச்சிக் கூடு (அப்ரேசம்) துண்டு துண்டாக நறுக்கியது 20 கிராம், மான்கொம்பு பஸ்மம் 40 கிராம், ஜத்வார் (நிர்விஷீ) 20 கிராம், கஸ்தூரி 10 கிராம், அம்பர் 10 கிராம். இவைகளில் முதலில் பிஷ்டிகளைக் கல்வத்தி லிட்டு ஒன்ருக்கி ரேக்குகளையும் கலந்தரைத்து ஒன்ருனதும், பன்னீர் விட்டுப் பதினான்கு நாட்கள் அரைத்து 15-வது நாள் கஸ்தூரியையும் அம்பரையும் கலந்து ஒருநாள் பன்னீர்விட்டரைத்து டெஸி கிராம் அளவு மாத்திரை செய்துகொள்ளவும்.

தினம் 2—3 வேளை ஒரு மாத்திரை தேன் அல்லது கமீரே காவ்ஜபானுடன் சாப்பிட்டு மேல் பால், தாழம்பூ அர்க்கம், பேத்முச்க் அர்க்கம் அல்லது காவ்ஜபான் பூவின் அர்க்கம் சாப்பிடவும்.

ஹிருதயத்திற்கு நேரிடையாகப் பலமளிக்கும் மிகச் சிறந்த ரஸாயனம், ஹ்ருதயப் படபடப்பு, பலஹீனம், திகை ஏற்படுதல், மூளை பலவீனம் இவைகளில் மிகவும் நல்ல குணமளிக்கும்.

5. கமீரே காவ்ஜபான் - ரோஜாப்பூ, சந்தனம், ஜடாமாம்ஸீ, கொத்துமல்லி விதை, உஸ்துகுத்துஸ், பட்டுப்பூச்சிக் கூடு, அல்லிக்கிழங்கு, கல்பாசி இவை வகைக்கு 10 கிராம், பாதரஞ்ஜ் போயா 15 கிராம், காவ்ஜபான் பூ 80 கிராம் இவைகளை 800 மிலி லிடர் பன்னீரில் ஒருநாள் ஊரவைத்து மறுநாள் மிக இளந்தீயில் மூன்றில் ஒரு பங்கு மீதமாகக் காய்ச்சிக் கசக்கிப் பிழிந்து வடிகட்டி அதில் 400 கிராம் சர்க்கரை கலந்து பானகமாக்கிக் கொள்ளவும். பானகத்தில் பச்சைக் கற்பூரம் 1·25 கிராம், அம்பர் 1·25 கிராம், குங்குமப்பூ 3 கிராம். இவைகளைப் பன்னீரில் அரைத்துக் கலந்து கொள்ளவும்.

1—2 ஸ்பூன் அளவு தனியாகவும் ஜவாஹர் மோஹராவின் அனுபானமாகவும் சாப்பிட நல்லது. ஹிருதயத்திற்கும் மூளைக்கும் பலமளிக்க வல்லது.

6. யாகூதி: மாணிக்கம், பச்சை, முத்து, பவழம் இவைகளின் பிஷ்டி, சந்திரோதய ரஸம், தங்க ரேக்கு, அம்பர், கஸ்தூரி, பட்டுப்பூச்சி கூடு, குங்குமப்பூ இவை வகைக்கு 20 கிராம், பஹ்மன்லால், பஹ்மன் ஸபேத், ஜாதிக்காய், கிராம்பு, வெள்ளை மிளகு இவைகளின் சூர்ணம் வகைக்கு 10 கிராம்; முதலில் சந்திரோதயத்தையும் வரிசையாக ரேக்குகளையும் பிஷ்டிகளையும் மற்றவைகளையும் கல்வத்திலிட்டு அரைத்து இரண்டறக் கலந்தபின் பன்னீர் விட்டு 21 நாள் அரைத்து 22-வது நாள்

கஸ்தூரியையும் அம்பரையும் சேர்த்து ஒருநாள் அரைத்து ஒரு டெஸி க்ராம் அளவு மாத்திரை செய்துகொள்ளவும்.

தினம் 2—3 வேளை 1 மாத்திரை புதினச் சாற்றுடன் கொடுக்கவும்.

ஹ்ருதயத்தின் பலவீனம், ஸந்நிபாத ஜ்வரம் முதலியவை களில் நாடித் தளர்ச்சி, குளிர் பூசுதல், சில்லீடுதல், வியர்வை மிகுதி, திகை, படபடப்பு முதலியவைகளில் இது நன்கு குணம் தருகிறது.

7. ஹ்ருத்ய சூர்ணம்: டிஜிடாலிஸ் இலை சூர்ணம் 1 கிராம் சிருங்க பஸ்மம் 2 கிராம் இவைகளை 3 மணி நேரம் நன்கு அரைத்துக் கொள்ளவும்.

1 டெஸி கிராம் அளவு தேனில் சாப்பிடவும்.

ஹிருதயத்தின் பலவீனம், படபடப்பு, நாடித் துடிப்பு மிகுதி இவைகளில் கொடுக்க நல்லது. ஹ்ருதய ரோகத்தின் உபத்திரவமாக ஸர்வாங்க வீக்கம் ஏற்படும்போது ஆரோக்ய வர்த்தினி சேர்த்துக் கொடுக்கலாம். நாட்பட்ட இருமலில் கபம் மிகுந்து பிசுக்குடன் இருக்கும்போது ஹ்ருதயமும் பலவீனப் பட்டால், காட்டு வெங்காயத்தின் தூள் ஒரு கிராம் இத்துடன் சேர்த்தரைத்துக்கொண்டு உபயோகிக்கவும். ஹிருத்ய சூர்ணம் உபயோகிக்கும்போது குமட்டலோ வாயில் ஜலம் ஊறுதலையோ கண்டால் சில நாட்களுக்கு இம் மருந்தை நிறுத்திப் பின்னர் உபயோகிக்கவும்.

8. லதா கரஞ்ஜ வடீ: வருத்த கழற்சிப் பருப்பு 32 கிராம், ஓமம் 8 கிராம், மிளகு 4 கிராம், பொரித்த பெருங்காயம் 1 கிராம், ஸௌவர்சிலை உப்பு 6 கிராம் இவைகளைக் கலந்து ஜலம் விட்டரைத்து $\frac{1}{2}$ கிராம் அளவு மாத்திரை செய்துகொள்ளவும்.

1—2 மாத்திரை சாப்பாட்டிற்கு முன்னரோ நடுவிலோ பின்னரோ சாப்பிடலாம். ஆமத்துடனும் கபத்துடனும் சேர்ந்து வயிற்றில் வாயுவால் உண்டாகும் பொறுமல் உப்புசம் முதலியவை களால் அக்னி மந்தமும் வாயுவின் பிரதிலோம கதியும் ஏற்பட்டு ஹிருதய ப்ரதேசத்தில் வலி ஏற்படும்போது இது பெரிதும் உதவு கின்றது.

9. மதுரவிரேசனம்: கருப்பு திராக்ஷை, பேரீச்சை, சரக் கொன்னைப் புளி, அதிமதுரம் இவைகளின் கஷாயம் இரவில் படுக்கும்போதோ, காலையிலோ சாப்பிட லகுவாக பித்தக்கட்டை

வெளியாக்கிப் பேதியாகும். ஹிருதயப் படபடப்பு நீங்கும். ஹிருதய நோயில் சரக்கொன்னைப் புளி விரேசனமாகக் கொடுக்கச் சிறந்தது.

10. ஆரக்வத கபிலா வடீ: சரக்கொன்னைப் புளியை வென்னீரில் இட்டுப் பிசைந்து வடிகட்டி விழுதை வெயிலில் உலர்த்தியோ, அடுப்பிலிட்டு அடி பிடிக்காமல் காய்ச்சியோ நீரை அகற்றி தேறின அளவில் பாதி அளவு கமேலா (கம்பில்லகம்) தூள் சேர்த்து அரை கிராம் அளவு மாத்திரை செய்துகொள்ளவும். இரவில் படுக்கு முன்னர் சாப்பிட பித்த கபக்கட்டை வெளியாக்கி லகுவாக பேதியாகும். ஹிருதயத்திற்கு ஏற்றது.

11. காமதுகா ரஸம்: பசுவின் பாலில் பாவனை செய்து சுத்தமான பூங்காவி, பிரவாளபிஷ்டி, சங்க பிஷ்டி, சுக்தி (முத்துச் சிப்பி) பிஷ்டி. கபர்த (சோழி) பிஷ்டி, முத்தா (முத்து) பிஷ்டி, குடுசீஸத்வம் இவை வகைக்குச் சமஎடை சேர்த்து நன்கு அரைத்து வைத்துக்கொள்ளவும். (பிஷ்டிக்குப் பதில் பஸ்மமும் சேர்ப்பதுண்டு).

2 டெஸிக்ராம் அளவு ஜீரகசூர்ணமும் சர்க்கரையும், சர்க்கரை. நெய் அல்லது தேன் சேர்த்து 2 வேளை சாப்பிட நல்லது.

பித்தத்தால் ஏற்படும் ஹிருதய ரோகங்களில் மிகவும் ஏற்றது. இத்துடன் ஸ்வர்ண மாக்ஷிக பஸ்மம் சேர்த்தும் கொடுப்பதுண்டு. அனுபானமாக நெல்லிக்காய் லேகியம், மாதுளம்பழ லேகியம் கொடுக்கலாம். இது சீதவீர்யமுள்ள ரஸாயனம், அம்லபித்தம், தலைசுற்றுதல், தலைவலி, நரம்புத் தளர்ச்சி, எரிச்சல், நாட்பட்ட ஜ்வரம், காங்கை, க்ஷயம், திகை இவைகளில் நல்லது.

12. திலாதிமோதகம்: சுத்தி செய்த சேங்கொட்டை, எள்ளு, கடுக்காய், வெல்லம் வகைக்குச் சம எடை சேர்த்து இடித்து ½ கிராம் அளவில் மாத்திரை செய்து கொள்ளவும்.

வாயு கபம் ஆமம் இவைகளின் கூட்டால் ஏற்படும் ஹிருதய நோயில் முக்கியமாக ஆமவாதத்தில் ஏற்படும் ஹிருதய நோய் 2—3 வாரத்தில் சமனமடையும்.

13. அஜஹிருதய வடீ: ஆட்டின் ஹிருதயம் 16 பங்கு, லிங்கம் 1 பங்கு, ஹிருதயத்தைத் துண்டு துண்டாக்கி லிங்கத்துடன் கல்வத்திலிட்டு நன்கு அரைத்துக் காய்ந்தவுடன் ஏலரிசி ½ பங்கு குங்குமப்பூ ½ பங்கு சேர்த்து நன்கு அரைத்து 3-6 டெஸிக்ராம் அளவு மாத்திரை செய்து கொள்ளவும்.

பால் அல்லது வெண்ணெய் அனுபானத்துடன் கொடுக்க ஹிருதயத் தசைகளின் பலவீனம் மாறி ஹிருதயம் பலப்படும். பாலில் ஆட்டின் ஹிருதயத்தை வேக வைத்துப் பிழிந்து சர்க்கரை சேர்த்துப் பாலைச் சாப்பிடலாம்.

14. ஆரோக்கிய வர்த்தினீவடீ: ரஸம் 3, கந்தகம் 3, அயஸ் 3, அப்ரகபஸ்மம் 3, தாம்ரபஸ்மம் 3, திரிபலை 2, சிலாஜது 3, குக்குலு 4, சித்ரமூலப் பட்டை 4, கடுகரோகிணி 18, குச்சி மண் நீக்கிய குக்கிலை வேப்பிலை கஷாயத்தில் 6 மணி நேரம் ஊரவைத்து அரைத்து கஜ்ஜலி செய்த ரஸகந்தகங்களையும் மற்றவைகளையும் சேர்த்தரைத்து வேப்பிலை கஷாயத்தில் 3 பாவனைகள் செய்து சூர்ணமாகவோ 3 டெஸிக்ராம் அளவுள்ள மாத்திரைகளாகவோ செய்து கொள்ளவும்.

1-2 மாத்திரைகளை ரோக நிலைக்கேற்ப கடுக்காய் கஷாயம், புனர்னவாஷ்டக கஷாயம், தசமூலகஷாயம் முதலியவைகளுடன் கொடுக்கலாம்.

நல்ல பாசனம், தீபனம், மேதஸ் அடைப்பைக் குறைத்துப் பலம் தரும், கொழுப்பு மிகுதியால் ஏற்படும் ஹிருதயத் தளர்ச்சி, வீக்கம், உதரம் முதலியவைகளில் நல்லது கடுகுரோகிணி டிஜி டாலிஸைப் போல் ஹிருதயத்தின் படபடப்பை அடக்கி ரக்த அழுத்தத்தை அதிகப்படுத்தி ஹிருதயத்திற்குப் பலம் அளிக்கின்றது.

15. ஹிரண்யகர்ப்ப பொட்டலீரஸம்: ரஸம் 4, கந்தகம் 2, ஸ்வர்ண பஸ்மம் 1, தாம்ரபஸ்மம் 3, ரஸத்தையும் கந்தகத்தையும் கஜ்ஜலி செய்து பின் பஸ்மங்களைக் கலந்து கற்ருழைச் சாற்றில் 7 நாள் அரைத்து வர்த்தியாக்கிக் கொள்ளவும். பிறகு ஒரு பட்டுத் துணியில் சுத்த கந்தகத்தைக் துளாக்கி மேல் தூவி அதன் நடுவில் வர்த்தியை வைத்துச் சுற்றி பொட்டலமாக்கி நூலால் கட்டிச் சிறிய மண் அல்லது பீங்கான் பாத்திரத்தினுள்வைத்து வர்த்திமுழுகும் வரை சுற்றி கந்தகத்தைத் தூள் செய்து போட்டு மிருதுவான அக்னியில் (112—119 டிகிரி தாபமானத்தில் கந்தகம் உருகுமானதால் அந்த அளவு சூடு வரும் வரை) தோலா யந்திரத்திலிட்டு எரித்து கந்தகம் உருகி ஆகாய நிறத்தில் புகை வெளிவந்ததும் இறக்கி பொட்டலத்தை அகற்றிச் சற்று ஆறியதும் மேல் பட்டுத் துணி அகற்றி ஆறவிடவும். நன்கு ஆறியதும் மேலுள்ள கந்தகத்தைச் சுரண்டி அகற்றி அரைத்து வைத்துக் கொள்ளவும்.

ஸந்நிபாத ஜ்வரத்திலோ வேறு எந்நிலையிலோ ஹிருதயம் தளர்ந்து அதிகவியர்வை, உடல் சில்லிடுதல், நாடிதுடிப்பு அடங்

குதல், முதலிய குறிகள் காணும்போது இதை இஞ்சிச் சாற்றிலோ வெற்றிலைச் சாற்றிலோ கொடுக்க நல்லது.

16. பிருஹத்வாத சிந்தாமணி: ஸ்வர்ண பஸ்மம் 3, வெள்ளி பஸ்மம் 2, அப்ரகபஸ்மம் 2, அயஸ்ஸிந்தாரம் 5, பிரவாளபிஷ்டீ 3, முக்தாபிஷ்டி அல்லது பஸ்மம் 3, ரஸஸிந்தூரம் அல்லது சந்திரோதய ரஸம் 7 பங்கு. இவைகளைக் கல்வத்திலிட்டு கற்ருழைச் சாற்றில் அரைத்து 1 டெஸிக்ராம் அளவிற்கு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். (யாதவஜீயின் ஸித்தயோக ஸங்கிரஹத்தில் தங்கபஸ்மம் ஒரு பங்கும் அயஸ்ஸிந்தூரம் 3 பங்கும் சேர்த்து அதிகப்படியாக கஸ்தூரியும் அம்பரும் ஒவ்வொரு பங்கு கூடச் சேர்க்கக் கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.)

1—2 மாத்திரை தினம் 2—3 வேளை வாத பித்தஹரமான ஒரு அனுபானத்துடன் கொடுக்கலாம். ஆம வாதத்தால் ஏற்படும் ஹிருதய ரோகத்தில் குக்குலுவுடன் கொடுக்கலாம். வாதிக ஹிருதய ரோகத்திலும் அன்ஜினு பெக்டோரிஸ் கரோனரி த்ராம்போஸிஸ் இவைகளின் ஜீர்ண நிலையிலும், ஜ்வரத்திற்குப் பின்னர் வரும் ஹிருதய துர்பலத்திலும் சிறந்தது. மற்றும் ஸந்நிபாத ஜ்வரத்தில் பிதற்றல், மயக்கம், நாடித்தளர்ச்சி, கையில் உதறல், வியர்வை மிகுதி முதலிய குறிகள் காணும்போது (failure of Periphral circulation) இதன் உதவி மிகவும் நல்லது.

17. ஹிருதய சிந்தாமணி ரஸம்: (முதலில் கூறிய சிந்தாமணி ரஸத்தில் சற்று மாறுபட்டது.) ரஸம், கந்தகம், அப்பிரகபஸ்மம், லோஹ பஸ்மம், வங்க பஸ்மம். சிலாஜது வகைக்கு 12 கிராம், ஸ்வர்ண பஸ்மம் 3 கிராம், ரஜத பஸ்மம் 3 கிராம் இவைகளைக் கொடிவேலி வேர் பட்டை கஷாயத்திலும் பொற்றலைக் கையாந்தரைச் சாற்றிலும், மருதம்பட்டை கஷாயத்திலும் 7—7 பாவனை செய்து 1 டெஸி கிராம் அளவு மாத்திரை செய்து கொள்ளவும்.

1—2 மாத்திரை தினம் 3 வேளை தேனில் கொடுக்கவும். அனுபானமாக கோதுமைக் கஞ்சித் தெளிவு, தசமூலாரிஷ்டம் எல்லா ஹிருதய நோய்களிலும் சுவாஸாசய வீக்கத்திலும் ஹிருதய நோய் கலந்த சுவாஸத்திலும் (கார்டியக் ஆஸ்துமா) காலத்திலும் மிக நல்லது.

பொதுவாக எல்லா ரக ஔஷதங்களுமே கொடிவேலிச் சாற்றிலரைத்துப் பாவனை செய்ய பாசனமாகும். கையாந்தரையில் பாவனை செய்ய கல்லீரல் நோய் விலகும். மருதம் பட்டை கஷாயத்தில் பாவனை செய்ய ஹிருதய நோயும் விலகும்.

18. த்ரிநேத்ர ரஸம் : ரஸம், கந்தகம், ஆயிரம் புடமிட்ட அப்பிரகம் வகைக்கு ஒரு தோலா, மருதம்பட்டை கஷாயத்தில் 21 பாவனை செய்து 2—4 டெஸிக்ராம் அளவு மாத்திரை செய்து கொள்ளவும். அனுபானம் தேன், தசமூலாரிஷ்டம்.

எல்லாவிதமான ஹிருதய நோய்களிலும் அதிகமாக ஹிருத யத்தின் பலவீன நிலையில் உதவக் கூடியது. ஹிருதயத்திற்குப் போஷணம் நன்கு கிடைக்கும். அதனால் ஹிருதயத் தசைகள் வலுப்பெற்று துடிப்பு பலப்படும். அதன் படபடப்பு குறையும். துவர்ப்பு மிக்க மருதம்பட்டை கஷாய பாவனையில் இதில் வீக்கத்தைக் குறைக்கும் குணமும் மூத்திரலகுணமும் அதிகமா கின்றது.

19. நாகார்ஜுனப்பிரம் : ஆயிரம் புடமிட்ட அப்ரக பஸ் மத்தை 7 நாள் மருதம்பட்டை கஷாயத்திலும் பாவனை செய்து டெஸிக்ராம் அளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஹிருதய நோய்கள் அனைத்தும் வலியும் குணமாகும்.

20. ஹிருதயார்ணவ ரஸம் : ரஸம், கந்தகம் 100 புடமிட்ட தாம்ர பஸ்மம் சமனெடை சேர்த்துக் கல்வத்திலிட்டுத் திரிபலை கஷாயத்திலும் மணத்தக்காளிச் சாற்றிலும் ஒவ்வொரு பாவனை செய்து ஒரு டெஸி கிராம் அளவு மாத்திரை செய்துகொள்ளவும்.

1—2 மாத்திரை, தேன், கர்ஜூராஸவம், திராக்ஷாரிஷ்டம், தசமூலாரிஷ்டம் முதலியவைகளுடன்.

ச்வாஸம், காஸம், கல்லீரல் பக்கத்தில் கடுமையான வலி யுடன் கல்லீரல் நோய் இவைகளும் ஏற்படும் ஹிருதய துர்பலத் தில் முக்கியமாக குணம் தருகிறது. Congestive heart failure-ல் இது நல்ல குணம் தருகிறது.

21. ச்வாஸ சிந்தாமணி : லோஹ பஸ்மம் 8 கிராம். கந்தகம் 4 கிராம், அப்பிரகபஸ்மம் 4 கிராம், ரசம் 2 கிராம். ஸ்வர்ண மாக்ஷிக பஸ்மம் 2 கிராம், முத்து பிஷ்டி 1 கிராம், ஸ்வர்ண பஸ்மம் 1 கிராம் இவைகளைக் கண்டங்கத்திரிச் சாற்றிலும், இஞ்சிச் சாற் றிலும் ஆட்டுப் பாலிலும் அதிமதுர கஷாயத்திலும் 3—3 அல்லது 7—7 பாவனை செய்து 2 டெஸி கிராம் அளவு மாத்திரை செய்து கொள்ளவும்.

அனுபானம் தான்றிக்காய் சூர்ணமும் தேனும் அல்லது திப்பிலி சூர்ணமும் தேனும்.

ஹிருதய நோயில் ச்வாஸமும் காஸமும் மிகுந்துள்ள நிலையில் கொடுக்க நல்லது.

(தொடரும்)

கிரஹணீ

(ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ B. வைத்தியநாதன், சென்னை)

கிரஹணீ என்ற சொல் மிகப்பிரஸித்தமாக இருப்பினும் சரீரத்தில் அதன் ஸ்தானம் எங்கு என்பது நன்கு விளங்கவில்லை. ஆனால் கிரந்தங்களில் கிரஹணிக்குக் கீழ்க்கண்டவாறு பல விளக்கங்கள் காணப்படுகின்றன. சரகர்

“அக்ந்யதிஷ்டான மன்னஸ்ய கிரஹணாத் கிரஹணீ மதா |
நாபேருபர் யக்நிபலேநோபஷ்டப்தோப ப்ரும்மிதா ||
அபக்வம் தாரயத்யந்நம் பக்வம் ஸ்ருஜதி பார்ச்வத: |
துர்பலாக்நிபலா த்வந்நமாமமேவ விமுஞ்சதி ||”

என அக்நிக்கு ஆதாரம் எனவும் நாபியின் மேல்புரத்தில் அக்நி பலத்தால் நிலையுற்று வலிவு பெற்றிருப்பதாகவும் கிரஹணியை விளக்குகிறார். மேலும் பக்குவமாகும்வரை ஆஹாரத்தைத் தடுத்து நிறுத்தி பக்குவமானபிறகு அதை ஒருபக்கமாக வெளியேற்றுவதாகவும் குறிப்பிடுகிறார். ஸுச்ருதர் “ஷஷ்டீபித்ததரா நாமயாகலா பரிகீர்த்திதா, பக்வாமாசய மத்யஸ்தா கிரஹணீத்ய பிதீயதே” எனப் பக்குவாசயம், ஆமாசயம், இவைகளின் நடுவே அமைந்துள்ள பித்த தராகலா தான் கிரஹணீ என்கிறார்.

மதுகோச உரையாளர் ‘கிரஹணீச அக்ந்யதிஷ்டாநம் நாடீ” என கிரஹணியை ஓர் நாடி எனக் குறிப்பிடுகிறார்.

இதேபோல் ஸர்வாங்க ஸுந்தரீ கர்த்தாவும்

“தஸ்ய அக்நேர்ஜாடரஸ்ய அதிஷ்டானம் ஆதார: க்யத்ராஸௌ சாரீரோக்நிஸ்திஷ்டதி ஸா அந்நஸ்ய க்ரஹணாத் தத்ஸம்க்ஞா கிரஹணீ மதா | ஆமாசயஸ்தோ விசிஷ்டதமநீ விசேஷ” |

என்று கிரஹணீயை ஓர் தமநீ என விளக்குகிறார். வாக்படர்

தததிஷ்டா நமந்நஸ்ய கிரஹணாத் கிரஹணீ மதா |
ஸைவதந்வந்தரி மதே கலாபித்த தராஹ்வயா |
ஆயுராரோக்ய வீர்யோஜோ பூததாத்வக்நி புஷ்டயே |
ஸ்திதா பக்வாசயத்வாரி புக்த மார்கார்கலேவ ஸா |

புக்தமாமாசயே ருத்வா ஸா விபாச்ய நயத்யத: |
பலவத்யபலா த்வந்ந மாமமேவ விமுஞ்சதி |
க்ரஹண்யா பல மக்நிர்ஹி ஸ சாபி க்ரஹணீபல: |
தூஷிதே க்நௌ அதோதுஷ்டா க்ரஹணீ ரோககாரிணீ ||

என சரகர், ஸுச்ருதர் இவர்களுடைய விளக்கங்களையே அடிப்படையாகக்கொண்டு பக்குவாசயத்தின் வாயிலில் அமைந்துள்ள தாழ்ப்பாள் என க்ரஹணியைக் குறிப்பிடுகிறார். இயற்கை நிலையில் ஆமாசயத்தில் நின்று ஆஹாரங்கள் நன்கு பக்குவமான பின்னரே இந்த க்ரஹணீ பக்குவாசயத்தின் வாயிலைத்திறக்கிறது. இதைத்தான் சரகர் "ஸ்ருஜதி பார்ச்வத" எனக் குறிப்பிடுகிறார்.

இவ்விதம் கிரஹணீயின் செய்கைதான் பலவிதமாக விளக்கப்பட்டிருக்கிறதே தவிர அதை ஓர் உறுப்பு என விளக்கியதாகத் தெரியவில்லை. அங்கவிபாகம் என பல அங்கங்களை விளக்கும் இடத்திலும் க்ரஹணீயின் பெயர் காணப்படவில்லை. மிக மிக முக்கியமானதோர் அங்கத்தைப் பட்டியலில் சேர்க்காத காரணம் தான் என்ன என்பது புதிராகவே இருக்கிறது.

மேலே குறிப்பிட்டுள்ள விளக்கங்களிலிருந்து க்ரஹணீயின் உருவத்தை ஊகித்துத் தீர்மானிப்பதும் சிரமமாகவே இருக்கிறது. ஏனென்றால் அந்த விளக்கங்களில் கண்டுள்ள பல பதங்களுக்கு விளக்கங்கள் தேவைப்படுகின்றன. அதாவது அங்கு குறிப்பிட்டுள்ள "ஆமாசய:, பக்வாசய:, பார்ச்வத: ஸ்ருஜதி, நாபி:" என்ற சொற்களை சாதாரணமாக நாம் கூறும் பொருள்களைக் கொண்டு விளக்குவது நன்கு பொருந்தவில்லை.

"ஊஷ்மணோல்ப பலத்வேன தாது மாத்யமபாசிதம் |
துஷ்டமாமாசய கதம் ரஸமாமம் ப்ரசக்ஷதே" ||

அதாவது ஆமாசயத்தை அடைந்த அபக்குவமான ரஸதாதுவை ஆமம் எனக் குறிப்பிடவேண்டும் என்ற இந்த இடத்தில் விளக்கம் கூறும்போது ஆமாசயம் என்பதற்கு நாம் சாதாரணமாகக் கூறும் இரைப்பை என்ற பொருள் பொருந்தாது.

"ஆமாசயாத்கதம்" என்று ஆமாசயத்தில் நின்றும் வெளியேறிய ரஸதாது எனப்பொருள் கூறலாமோ என்றால்,

"ஆமாசயஸ்த: காயாக்நேர் தௌர்பல்யாத விபாசித:
ஆத்ய ஆஹாரதாதுர்ய: ஸ ஆம இதி ஸம்க்ஞித:

என ஆமாசயஸ்த: ஆமாசயத்தில் நிலைகொண்டுள்ள என்ற ஓர் விளக்கமும் காணக் கிடைக்கிறது. ஆகவே ஆமாசயாத்கதம்

என்று பஞ்சமீ தத்புருஷம் இல்லாமலும் ஆஹாரத் திரவத்திற்கு ரஸதாது என்ற நிலே அது ஓரளவு பக்குவமாகிய வ்யாந வாயுவின் பலத்தால் ஸர்வசரீரத்திலும் வியாபிக்கத் தகுதியாயுள்ள நிலையிலேயே பொருந்தும். எனவே நன்கு ஜீர்ணமாகாது சிறிய ஓர் இரைப்பையில் மாத்திரம் தங்கியுள்ளதை ரஸதாது, ஆமம் என விலக்குவது மிக மிக மேலெழுந்தவாரியாக உள்ளது. இவ்வித நோக்கிலும் வேறு சில காரணங்களைக் கொண்டுமே இரைப்பை, குடல் இவைகளுக்கு ஆமாசயம், பக்குவாசயம் என்ற குறுகியதோர் விளக்கம் கூறப்படுகிறது. இங்கு ஆமாசயம் என்பதற்கு "ஆஸமந்தம் சேரதே இத்யாசய: ஆமம் பக்குவம் வா ஆசேரதே இத் யாமா சய: பக்வாசயோ வா" என ரஸதாதுவின் ஆம நிலையையோ, பக்குவ நிலையையோ பொறுத்துத்தான் ஆமாசயம், பக்குவாசயம் என்ற வ்யவ ஹாரம் என விளக்குகிறது.

எனவே "வ்யாநேந ரஸ தாதுர்ஹி விக்ஷேபோசித கர்மணு | யுகபத் ஸர்வதோ ஜஸ்ரம் தேஹே விக்ஷிப்யதே ஸதா | என எப்பொழுதும் வ்யாந வாயுவால் ரஸம் வ்யாபிக்கும் 'தலே முதல் கால் வரையிலான இடங்கள் அனைத்துமே ரஸத்தின் நிலையைப் பொருத்து ஆமாசமாகவோ, பக்வாசயமாகவோ இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. "ஏவ மாமாசயே ப்யந்நம் பஹு ஸம்யக் ந ஜீர்யதி | சீயமானம் ததேவாந்நம் காலேநாமத்வம் ஆப்னுயாத் || என அஜீர்ணமான அன்னம் ஆமாசயத்தில் நாளடைவில் தங்கித் தங்கி ஆமமாகிறது. என்கிருர். ஸர்வ சரீரத்திலும் வியாபிக்காது இரைப்பை ஒன்றில் மட்டும் பல நாட்கள் தங்கி நிற்பது என்பது சிந்திக்க வேண்டியதே. மேலும் நாபி: என்பதற்கும் நாம் சாதாரணமாகக் கூறும் விளக்கம் மாத்திரம் போதாது.

யாவத்யஸ்து சிரா : காயே ஸம்பவந்தி சரீரிணும் |
நாப்யாம் ஸர்வா : நிபத்தாஸ்தா : ப்ரதந்வந்தி ஸமந்தத : |
நாபிஸ்தா : ப்ராணினும் ப்ராண : ப்ராணுந் நாபிவ்யபாச்ரித : |
சிராபிராவ்ருதா நாபி : சக்ரநாபிரிவாரநகை : |
வ்யாப்னுவந்த்யபிதோ தேஹம் நாபித : ப்ரஸ்ருதா : ஸிரா : |
ப்ரதாநா : பத்மிநீகந்தாத் பிஸாதீநாம் யதாஜலம் |
சதுர் விம்சதி தமந்யோ நாபிப்ரபவா அபிஹிதா : |

என ஸிரை தமனி முதலியவைகளின் உத்பத்தி ஸ்தானம் எனவும் சக்கரத்தின் கடைப்பகுதிபோல் பல வந்து ஒருங்கே சேரும் இடம் எனவும் நாபியைக் குறிப்பிடுகிருர். நிற்க,

ஆதா ராத்த்வ்யங்கு லாதூர்த்வம் மேஹநாத்ந்வ்யங்குலாதத : |
ஏகாங்குலம் தேஹமத்யம் தப்த ஜாம்பூ நதப்ரபம் |

தத்ராஸ்தேSக்நி சிகாதந்வீ சக்ராஸ்தஸ்மாந் நவாங்குலே |
தேஹஸ்ய கந்தோ ஸ்த்யுத்ஸே தாயாமாப்யாம் சதுரங்குல : |
ப்ரஹ்ம க்ரந்திரிதிப்ரோக்தம் தஸ்யநாம புராதநை : |
தந்மத்யே நாபிசக்ரம் து த்வாத சாரமவஸ்திதம் |
லூதேவ தந்துஜாலஸ்தா தத்ர ஜீவோ ப்ரமத்யயம் |
ஸுஷும் நாயா ப்ரஹ்ம ரந்த்ர மாரோஹத்யவ ரோஹதி |
ஜீவ : ப்ராணஸமாரூட : ரஜ்வா கோல்ஹாரி கோயதா |

என மூலாதாரத்தில் நின்றும் சுமார் 12 அங்குல உயரத்தில் ப்ரம்ம கிரந்தியும் அதன் மத்தியில் நாபியும் அமைந்திருப்பதாகவும் ஸங்கீத ரத்னாகரம் கூறுகிறது.

நாபி என்பதற்கு பல பொருள்கள் வந்து ஒருங்கே சேரும் இடம் என்றும் பொருள் உண்டு. ஆகையால் நாபி என்பதற்கும் வேறு பொருள் கூறவேண்டும்.

ஸாதாரணமாக "பித்தம் பஞ்சாத்மகம் தத்ர" எனப் பாசக பித்தத்தின் ஸ்தானத்தைக்கொண்டு நாபி என்பதற்கு வ்யவஹாரத்தில் உள்ள பொருளைக் கூறுகிறோம். ஏனெனில் நாபிக்கு மேல் அமைந்து அக்நியாக அது வேலை செய்வதுதான் அதற்குக் காரணம். "நாபேருபர்யக்தி பலேந" என்ற தொடருக்கு அது நல்ல விளக்கமாகத் தோன்றுகிறது.

ஆனால் இந்த பாசக பித்தத்தை அக்னியாக சரகர் ஒத்துக் கொள்ளவில்லை. தோஷங்கள், தாதுக்கள், மலங்கள் இவைகளோடே அமைந்துள்ள வெப்பத்தைத்தான் சரகர் அக்நி எனக் கூறுகிறார். இதற்கு அவர் கொடுக்கும் தனிப்பெயர் "காயாக்நி:" என்பது. இதைத்தான் வாக்படரும் "அந்நஸ்ய பக்தா பித்தம் து பாசகாக்யம் புரேரிதம். தோஷ தாது மலாதீநாம் ஊஷ்மேத் யாத்ரேய சாஸநம்". தேஷாம் தோஷாதீநாம் ஸம்பந்தீ ஊஷ்மா அக்நி: :, ஸஎவ அன்னஸ்ய பக்தா. நதுபித்தம் பாசகாக்யம் —

அ. ஹ்ரு. சா. 3 – 49.

என்று இருவருக்கும் உள்ள ஸித்தாந்த வேறுபாட்டை விளக்குகிறார். மேலும்,

"ஸமாநோவ்யாப்ய நிகிலம் சரீரம் வஹ்நிநாஸஹ |
த்விஸப்ததி ஸஹஸ்ரேஷு நாடீரந்த்ரேஷு ஸஞ்சரன் |
புக்த பீத ரஸாந் ஸம்யகாநயந் தேஹபுஷ்டி க்ருத்"

என அக்நி ஸர்வ சரீரத்திலும் வியாபித்து 72000 நாடிகளுள் பிரவேசித்து ஆகாரத்தைப் பக்குவப்படுத்துகிறது என அக்நியை ஸர்வ சரீர வ்யாபியாகவே ஸங்கீத ரத்னாகர கர்த்தா விளக்குகிறார்.

கிரஹணீ என்பதை ஓர் நாடி எனவும் தமநி எனவும், நாடிவ்யாபாரம் எனவும் விளக்குகிறார்கள். சரீரத்துள் அமைந்துள்ள ஆகாசீய அவகாசங்களுக்கு – இடைவெளிகளுக்கு – தமநி, நாடி எனப் பெயர்கள் என்றும் கூறுகிறார். "சதுர்விம்சதி தமந்ய: நாபிப்ரபவா:" என 24 தமநிகள் நாபியிலிருந்து கிளம்புகின்றன. இவற்றுள் கீழ்நோக்கிப் பிரிந்து செல்லும் தமநிகளின் விளக்கம் கிரஹணீயின் விளக்கத்துடன் சமமாக இருப்பது கவனிக்கத் தகுந்தது.

"அதோகதாஸ்து பித்தாசய மபிப்ரபன்ன: தத்ரஸ்தமேவான்ன பானரஸம் விபக்வ மௌஷ்ண்யாத் விவேசயந்த: அபிவஹந்த்ய: சரீரம் தர்ப்பயந்தி! அர்ப்பயந்திச ஊர்த்தகதானாம் திர்யக் கதானாம் ரஸஸ்தானம்ச அபிபூரயந்தி, மூத்ரபுரீஷஸ்வேதாம்ச்ச விரேசயந்தி! ஆம பக்வாசயாந்தரேச த்ரேதா ஜாயந்தே! தா: த்ரிம்சத்!" இங்கு "பித்தாசய" என்பதால் மேதஸைத்தான் கிரஹிக்க வேண்டும். கீழ்நோக்கிப் பிரிந்து சென்ற தமனிகள் மேதஸ்ஸில் நிலை கொண்டு அன்னபான ரஸத்தைப் பக்குவப்படுத்துவதுடன் மேல் நோக்கியும், குறுக்காகவும் பிரிந்து சென்ற தமனிகளின் வழியே ரஸ ஸ்தானங்களுக்கு ரஸத்தைப் பிரித்து அனுப்புகின்றன. மூத்ரம், புரீஷம், ஸ்வேதம் இவற்றையும் பிரித்து வெளியேற்றுகின்றன. இவ்விதம் ஆமாசயத்திற்கும் பக்வாசயத்திற்கும் நடுவில் அதாவது மாம்ஸ தாதுவிற்கும், அஸ்தி தாதுவிற்கும் மத்தியில் உள்ள மேதோ தாதுவில் இந்த பத்து தமனிகள் 30 தமனிகளாகப் பிரிந்து செயல்படுகின்றன.

(தொடரும்)

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் மதுரை கிளை

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தில் மதுரைக் கிளையின் மாதாந்தரக் கூட்டம் 26-11-72-ல் நடைபெற்றது. மதுரை வைத்ய ஸ்ரீ எஸ். வேலாயுதம் நாயர் அவர்கள் தலைமை வகித்தார்கள். கரிசலாங்கண்ணியைப்பற்றி வைத்யஸ்ரீ எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசினார்கள். வைத்ய ஸ்ரீமான்கள் எஸ். ஸ்ரீநிவாஸய்யர், வி. கே காசிராம் அய்யர் ஆகியோர் விவாதத்தில் கலந்து கொண்டார்கள். கார்யதரிசி ஆர்ய வைத்தியன் ஸ்ரீ பி. வி. ராகவ வாரியர் வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிவுற்றது.

கரிசலாங்கண்ணி

அங்கயற் கண்ணியின்—அருளாலே கரி
சலாங்கண்ணியின்—பெருமைகளை
தெரிந்த வரையில் உரைத்திடுவேன்—அதை
புரிந்த வரையிலே கேட்டிடுவீர்.

கரிசலாங் கண்ணியின்—மாற்றுப்பெயர்—அவை
கரப்பான், பொற்றலைக் கரப்பானும்
கையாந்தகரை மூலிகையாம் இவை
எல்லாம் ஒன்றே தான் கண்டிடுவீர்

உள்ளங்கால் முதல் உச்சிவரை—அங்கம்
உள்ள நோய்களை தீர்த்திடுமே
பூக்களில் மஞ்சள் வெள்ளை யென்று—தோன்றும்
இருவிதம் அதிலே இருக்கின்றது.

கண்ணைக் கொடுத்திடும் கரப்பானும்—தலை
நரையை நீக்கிடும கரப்பானும்
கூந்தலை வளர்க்கும் கரப்பானும்—அது
கொள்ளை அழகை கொடுத்திடுமே.

பற்களில் ஏற்படும் நோய்களெல்லாம்
பறக்கவே ஓட்டிடும் கரப்பானே
பார்வையிலே தோன்றும் குளுமைதனை
பதிவாகவே வந்து தந்திடுமே.

பாவிகள் வைத்த இடு மருந்துகளை—அது
படுபடு வேகமாய் ஓட்டிடுமே
சுவாச காசத்தின் கொடுமைகளை—விசு
வாசமாகவே விலக்கிடுமே.

பித்தத்தினுல் ஏற்படும் தொல்லைகளை
பிசகாமலே நீக்கிடும் கரப்பானே
தலைவலி மற்றும் சிரசு நோய்கள்—யாவும்
கையான் தகரை தீர்த்திடுமே.

கரிசலாங் கண்ணியின்—மருந்துகளை—இப்பொ
களங்கமில்லாமலே—கூறிடுவேன்.
குற்றங்களெல்லாம் நீக்கிவிட்டு—அரும்
குணங்களை மட்டும் கொண்டிடுவீர்

அஞ்சன மை கூட்டி அழகு பார்த்து—அரும்
தைலமதனை காய்ச்சிடுவீர்.
உள்ளுக்கு சாப்பிடும் மருந்துகளை—இதில்
உவந்தே அருமையாய்ச் செய்திடுவீர்.

கால் நாழி சார் தானும்—கரப்பானும் சுத்த
என் எண்ணை கால் நாழி—அதில் விட்டு
ஆவின் பாலிலே அறைத்திடுவீர்—கஸ்
தூரி மஞ்சளும் கோஷ்டமதை

அறைத்துக் கலக்கியே காய்ச்சி டுவீர்—பதம்
மாருமலே எடுத்து வைப்பீர்.
வாரம் இருமுறை குளித்திடுவீர்—நாளும்
இருவேளை தினம் குடித்திடுவீர்.

ஓடிடும், காசம் இருமல் தானும்—உஷ்ண
சம்பந்தமான தலை வலியும்,
மாருமலே வரும் மண்டை குத்துகளை
தடி கொண்டடித்து விரட்டிடுமே.

சொக்கர் மீனாட்சியின் அருளாலே இதை
செய்து பார்த்து மகிழ்ந்திடுவீர்
அனுபவத்தில் கண்ட உண்மை இது—இதை
எல்லோரும் செய்து பயனடைவீர்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

இம்ப்காப்ஸ்

புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.

இம்பகாப்ஸ இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூலகளில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருநதுகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாககிங முறைகளையும் இயந்திரங்களையும் இம்பகாப்ஸ பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்பகாபஸ புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறு மலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

maa/IMP/961/M TAM

IMPCOPS

உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

அடையார், சென்னை 20.

விற்பனை நிலையங்கள்: 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, சௌத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

VAIDYA CHANDRIKA DECEMBER 1972 Regd No. M. 4018

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினல்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலேகட்டிகளே

எங்நிலேயிலும், போக்குவதிலும,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.